மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்
முன்னிலை:திரு.ஆர்.மணிவர்மன், பி.ஏ., பி.எல்., எல்.எல்.எம்.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, மேட்டூர்
2024 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 18 ஆம் நாள் வியாழக்கிழமை
இ.ம.எண்.04/2023
அ.வ.எண்.124/2021

சாமிதுரை ...மனுதாரர்/வாதி

/எதிராக/

1. ஆனந்தபாபு
2. காசி
3. கிராம நிர்வாக அலுவலர், பி.என்.பட்டி.
4. வட்டாட்சியர், மேட்டூர்.
5. கோட்டாட்சியர், மேட்டூர்.
6. மாவட்ட ஆட்சியர், சேலம். ...எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

7. அண்ணாமலை
8. ஆயாம்மாள்
9. ராஜா
10. காவேரி ...எதிர்மனுதாரர்கள்/உத்தேசதரப்பினர்கள்

இம்மனு கடந்த 12.06.2024 ஆம் தேதியன்று இந்நீதிமன்றம் முன்பாக இறுதியான விசாரணைக்கு வரப்பட்டு மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.V.ரணதேவ் அவர்கள் ஆஜராகியும், 1, 2 எதிர்மனுதாரர்கள் இறந்தவர்களாகவும், 3 முதல் 6 எதிர்மனுதாரர்கள் தரப்பில் அரசு வழக்கறிஞர் திரு.S.ஹரிநாராயணன் அவர்கள் ஆஜராகியும் எதிருரை இல்லை என மேற்குறிப்பு செய்துள்ள நிலையிலும், 7 முதல் 10 வரையிலான எதிர்மனுதாரர்கள்/உத்தேசதரப்பினர்கள் தரப்பில் வழக்கறிஞர்கள் திரு.P.குழந்தைவேல் மற்றும் செல்வி.K.முத்துலட்சுமி அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதுரை கேட்கப்பட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள் வரை எமது ஆய்வில் இருந்து வந்து மேற்படி இம்மனுவில் இந்நீதிமன்றம் வழங்கிடும்.

## உத்தரவு

இம்மனு உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 1 பிரிவு 10(2) மற்றும் பிரிவு 151ன் கீழ் இம்மனுவின் உத்தேசதரப்பினர்களை வழக்கில் 7 முதல் 10 வரையிலான

பிரதிவாதிகளாக சேர்க்க உத்தரவிடக் கோரி மனுதாரர் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார்.

1) மனுப்பிரமாணப் பத்திரிக்கையின் சுருக்கம் : –

(i) மனுதாரர்/வாதியால், 1 முதல் 6 வரையிலான எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகளுக்கு எதிராக விளம்புகை, நிரந்தர உறுத்துக்கட்டளை மற்றும் செயலுறுத்துக் கட்டளை பரிகாரங்கள் கோரி வழக்கு தாக்கல் செய்யப்பட்டு, வழக்கு விசாரணைக்காக நிலுவையில் உள்ள நிலையில், உத்தேச தரப்பினர்கள் நால்வரும் அடியாட்களுடன் கடந்த 09.10.2023ம் தேதியில் மனுதாரருக்கு சொந்தமான தாவா சொத்தில் அத்துமீறி நுழைந்து தாவாசொத்தை ஆக்கிரமிப்பு செய்ய முயற்சித்தனர். அந்த சமயத்தில் மனுதாரரும், அவரது மனைவியும் மேற்படியார்களின் அடாவடி செயல்களை தடுக்க முற்பட்ட போது அவர்கள் மனுதாரரது மனைவியை அடித்து காயப்படுத்தியதால் மேட்டூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார். மனுதாரர் அக்கம் பக்கத்தினர் உதவியுடன் அடாவடிச் செயலை தடுத்து நிறுத்தினர்.

(ii) மேற்படியார்கள் தாவா சொத்தை விட்டு வெளியேறும்போது என்றைக்கிருந்தாலும் தாவா சொத்தை அபகரிக்காமல் விடப்போவதில்லை என சூளுரைத்து சென்றனர். பின்னிட்டு கருமலைக்கூடல் காவல்துறையினர் உத்தேச தரப்பினர்கள் பெயரில் CSR 300/2023 என்ற எண்ணில் வழக்கு பதிவு செய்து, விசாரணை மேற்கொண்ட போது தாவா சொத்து குறித்து வழக்கு நிலுவையில் இருப்பதாலும், இது சிவில் பிரச்சனை என்பதாலும், நீதிமன்றத்தின் மூலம் பரிகாரம் தேடிக்கொள்ளுமாறு தெரிவித்து விட்டனர். மேற்படியார்களது அடாவடி செயலை தடுத்து நிறுத்த மனுதாரருக்கு வேறு வழி தெரியாததாலும், நீதிமன்றத்தால் மட்டுமே மேற்படியார்களின் அடாவடி செயல்களை தடுத்து நிறுத்த முடியும் என்பதாலும் இம்மனுவின் உத்தேச தரப்பினர்களை வழக்கில் 7 முதல் 10 வரையிலான பிரதிவாதிகளாக சேர்க்க உத்தரவிடக் கோரி மனுதாரர் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார்.

<u>2) 10ம் எதிர்மனுதாரர்/உத்தேசதரப்பினரால் தாக்கல் செய்யப்பட்டு, 7 முதல் 9 வரையிலான எதிர்மனுதாரர்கள்/உத்தேசதரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்ட எதிருரையின் சுருக்கம்:</u>

(i) மனு பொய்யானது. சட்டப்படியும், நியாயப்படியும் ஏற்புடையதல்ல. கடந்த 09.10.2023ம் தேதியில் தாவா சொத்திற்குள் மனுதாரரும், அவரது உறவினர்களும் அத்துமீறி நுழைந்த போது 10ம் எதிர்மனுதாரர் தடுத்து நிறுத்தினார். 10ம் எதிர்மனுதாரருக்கு பாத்தியப்பட்ட சொத்திற்குள் மனுதாரர் நுழைந்து, வேண்டுமென்றே சட்டத்திற்கும், நியாயத்திற்கும் புறம்பாக செயல்பட்டார். மனுதாரர் அத்துமீறி நுழைந்த சொத்தானது உத்தேச தரப்பினர்களுக்கு சொந்தமானது. மனுதாரர் வேண்டுமென்றே மேற்கண்ட செயல்களை செய்துள்ளார். உத்தேச தரப்பினர்களின் மூதாதையரின் சொத்தானது இன்று வரை உள்ளது. உத்தேச தரப்பினர்கள் தான் மேற்படி சொத்தினை இன்று வரை அனுபவித்து கொண்டுள்ளனர். உத்தேச தரப்பினர்களின் சொத்தை மனுதாரர் ஆக்கிரமிப்பு செய்ததால் அதை உத்தேச தரப்பினர்கள் தடுத்து நிறுத்தினர்.

(ii) உத்தேச தரப்பினர்கள் கருமலைக்கூடல் காவல் நிலையத்தில் புகார் கொடுத்த போது அவர்கள் புகாரினை ஏற்க மறுத்துவிட்டனர். மனுதாரர் பணபலத்தாலும், ஆட்கள் செல்வாக்கினாலும் ஒரு பொய்யான புகாரினை கொடுத்து உத்தேச தரப்பினர்கள் மீது புகார் ரசீது பெறப்பட்டது என்பது தான் உண்மையாகும். மனுதாரர் தாவா தாக்கல் செய்யும் போது உத்தேச தரப்பினர்களை சேர்க்காமல் விட்டதற்கான காரணம் சொத்தானது உத்தேச தரப்பினர்களுக்கு சொந்தமானது என்பதால் மட்டுமே ஆகும். மனுவில் தேவையில்லாமல் உத்தேச தரப்பினர்களை சேர்த்திருப்பது தேவையற்ற ஒன்றாகும். உத்தேச தரப்பினர்கள் எக்காலத்திலும் மனுதாரர்களிடம் அடாவடி செயலினை செய்யவில்லை என்பது தான் உண்மையாகும். மேற்கண்ட மனுவானது ஏற்கத்தக்கதல்ல. எனவே மனுவினை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமென 7 முதல் 10 வரையிலான எதிர்மனுதாரர்கள் கூறியுள்ளார்கள்.

3) இருதரப்பு கற்றறிந்த வழக்குரைஞர்களின் மதிப்பிற்குரிய வாதங்கள் கேட்கப்பட்டன. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டன. மனுதாரர் மற்றும்

எதிர்மனுதாரர்கள் தரப்பில் வாய்மொழிச் சாட்சியங்களோ, சான்றாவணங்களோ எதுவும் முன்னிலைப்படுத்தவில்லை.

4) பிரச்சினை :–

இம்மனு அனுமதிக்கத்தக்கதா என்பதே ஆகும்.

5) பிரச்சினைக்கான தீர்வு

(i) மனுதாரர் தரப்பில் வழக்கு விசாரணைக்காக நிலுவையில் உள்ள நிலையில், உத்தேச தரப்பினர்கள் கடந்த 09.10.2023 ம் தேதியில் மனுதாரருக்கு சொந்தமான தாவா சொத்தில் அத்துமீறி நுழைந்து தாவாசொத்தை ஆக்கிரமிப்பு செய்ய முயற்சித்தனர் என்றும், மனுதாரர் அக்கம் பக்கத்தினர் உதவியுடன் எதிர்மனுதாரர்களின் செயலை தடுத்து நிறுத்திவிட்டனர் என்றும், உத்தேசதரப்பினர்கள் தாவா சொத்தை விட்டு வெளியேறும்போது தாவா சொத்தை அபகரிக்காமல் விடப்போவதில்லை என சூளுரைத்து சென்றனர் என்றும், இதுதொடர்பாக காவல்நிலையத்தில் புகார் அளித்த போது தாவா சொத்து குறித்து வழக்கு நிலுவையில் இருப்பதால், நீதிமன்றத்தின் மூலம் பரிகாரம் தேடிக்கொள்ளுமாறு அறிவுறுத்தினர் என்றும், எனவே இம்மனுவின் உத்தேச தரப்பினர்களை வழக்கில் 7 முதல் 10 வரையிலான பிரதிவாதிகளாக சேர்க்க உத்தரவிடக் கோரி மனுதாரர் மனுதாக்கல் செய்துள்ளது தெரியவருகிறது.

(ii) 7 முதல் 10 வரையிலான எதிர்மனுதாரர்கள்/உத்தேசதரப்பினர்கள் தரப்பில் உத்தேச தரப்பினர்களுக்கு பாத்தியப்பட்ட சொத்திற்குள் மனுதாரர் வேண்டுமென்றே சட்டத்திற்கு புறம்பாக அத்துமீறி நுழைய முயற்சித்தார் என்றும், காவல்நிலையத்தில் உத்தேசதரப்பினர்கள் அளித்த புகாரை ஏற்க மறுத்துவிட்டனர் என்றும், தாவா சொத்தானது உத்தேசதரப்பினர்களுக்கு சொந்தமானது என்பதால் தான் இவ்வழக்கை மனுதாரர் தாக்கல் செய்யும் போது உத்தேச தரப்பினர்களை சேர்க்காமல் விட்டுள்ளார் என்றும், தாவா சொத்து உத்தேச தரப்பினர்களுக்குடையது என்பதால் உத்தேச தரப்பினர்களுக்கு இடையூறு செய்ய வேண்டும் என்ற ஒரே நோக்கத்தில் தற்போது இவ்வழக்கில் உத்தேசதரப்பினர்களை தேவையற்ற தரப்பினர்களாக மனுதாரர் சேர்க்க முயற்சிக்கிறார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது தெரிய வருகிறது.

(iii) வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்ததில் மனுதாரர்/வாதியால், 1 முதல் 6 வரையிலான எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகளுக்கு எதிராக விளம்புகை, நிரந்தர உறுத்துக்கட்டளை மற்றும் செயலுறுத்துக் கட்டளை பரிகாரங்கள் கோரி வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது தெரிய வருகிறது. வழக்கு நிலுவையில் இருக்கும்போது உத்தேசதரப்பினர்கள் தாவா சொத்தில் அத்துமீறி நுழைந்து மனுதாரரின் சுவாதீன அனுபவத்திற்கு இடையூறு செய்வதாக தெரிவிக்கப்பட்டுள்ளது தெரியவருகிறது. ஆனால் உத்தேசதரப்பினர்கள் தரப்பில் மனுதாரர் தான் உத்தேசதரப்பினர்களுக்கு பாத்தியப்பட்ட தாவா சொத்தில் அத்துமீறி நுழைந்து இடையூறு செய்வதாக தெரிவித்துள்ளது தெரியவருகிறது. இந்நிலையில் இந்நீதிமன்றம் கவனத்தில் கொள்ளும் சங்கதி யாதெனில், தாவா சொத்தின் பேரிலான தனது உரிமை மூலத்தை நிரூபிக்க வேண்டிய நிரூபண சுமை மனுதாரரையே சார்ந்ததாகும். அதேபோல் தாவா சொத்தின் பேரில் உரிமை கோரும் மேற்படி உத்தேசதரப்பினர்களையும் வழக்கில் 7 முதல் 10 வரையிலான பிரதிவாதிகளாக சேர்த்து விசாரித்தால் தான் தரப்பினர்களிடையே உள்ள பிரச்சனை குறித்து ஒரு முழுமையான தீர்வு காண இயலும் என இந்நீதிமன்றம் கருதுகிறது.

(iv) இவ்வழக்கானது உரிமை விளம்புகை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளதை கருத்தில் கொள்கையில், வழக்கு பிரச்சனைக்கு தொடர்புடைய அனைத்து நபர்களையும் உள்ளடக்கி விசாரணை செய்தால் தான் வழக்கு விசாரணை முழுமையானதாகவும், வழக்கின் தரப்பினர்களை கட்டுப்படுத்தும் இறுதியான தீர்ப்பும் பகர முடியும் என்பதாலும், இவ்வழக்கில் பிறப்பிக்கப்படும் தீர்ப்பு அனைத்து நபர்களையும் உள்ளடக்கிய முழுமையான தீர்ப்பாக இருக்க வேண்டும் என்பதாலும், உத்தேச தரப்பினர்களை வழக்கில் 7 முதல் 10 வரையிலான பிரதிவாதிகளாக சேர்ப்பது நீதியின் நலனுக்கு உகந்தது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. வழக்கின் தகுதிப்பாடுகளை வழக்கு விசாரணையில் தான் முடிவு செய்ய இயலும் என்பதால், மேற்படி எதிர்வாதங்களை உத்தேச தரப்பினர்கள் விரிவாக வழக்கில் எடுத்துரைக்க வாய்ப்பு வழங்கப்படும் என்பதை கருத்தில் கொண்டும், இம்மனு அனுமதிக்கத்தக்கது என இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

முடிவாக, மனு செலவுத்தொகையின்றி அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2024 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 18 ஆம் நாள் இந்த திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறியப் பகரப்பட்டது.

R MANIVARMAN Digitally signed by R MANIVARMAN Date: 2024.07.18 18:18:28 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.

<u>மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:–</u> இல்லை

<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:–</u> இல்லை

R MANIVARMAN Digitally signed by R MANIVARMAN Date: 2024.07.18 18:18:33 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.